1993 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சென்னையில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை அமைக்க இடம் ஒதுக்கி, நன்கொடை வழங்கியமைக்காக முதல்வருக்கு நன்றி தெரிவித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு முக்கியச் செய்தியை என் சார்பில் அறிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த மாமன்றத்தின் சிறப்புக்குரிய உறுப்பினராகத் திகழ்ந்தவரும், இந்த தேச விடுதலைக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவருமான, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுடைய ஜெயந்தி விழா நாளைய தினம், வருகிறது. பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு, அவர் இந்த தேச விடுதலைக்காகச் செய்திட்ட எண்ணற்ற தியாகங்களை மனதிலே கொண்டு அந்தத் தெய்வீகத் திருமகனுக்கு சென்னை நகரத்தில் சிலை அமைத்திட வேண்டுமென்கிற கோரிக்கையை ஏற்று, அண்ணா சாலையில் பிரதானமான நந்தனம் சந்திப்பில் இடமும் வழங்கி, அந்தச் சிலை வைப்பதற்கு உரியவர்களிடத்தில் பிளவு இருந்த காரணத்தால் அரசாங்கத்தின் சார்பில் ஒரு குழுவையே நியமித்து, அந்தக் குழுவுக்கு என்னைத் தலைவராக இருக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணித்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிலையை அமைக்கிற பணிக்காக, நாளைய தினம் தேவர் திருமகனுடைய ஜெயந்தி விழா வருவதை முன்னிட்டு, அந்தச் சிலை அமைப்புக்கு என்று முதன் முதலாக தன்னுடைய சொந்த நிதியிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 1 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயை மனமுவந்து (மேசையைத் தட்டும் ஒலி) என்னிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். பசும்பொன்— தேவர் அவர்களுடைய பிறந்தநாளும், மறைந்த நாளும் ஒரே நாள் என்கிற சிறப்புக்குரிய அந்தப் பெருமகனின் ஜெயந்தி விழா நாளைய தினம் நடைபெறுவதையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிற இந்தப் பெரு நிதிக்காக, முதன் முதலில் வழங்கியிருக்கிற இந்த நிதிக்காக, அந்தக் குழுவின் சார்பிலும், என் சார்பிலும் அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)